தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 7-3-2015

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடை செய்த சூரியகாந்தி விதையை சேமித்து விற்கவும்

இந்தியாவில், 2013-14ல் சூரியகாந்தி பயிரிடும் பரப்பானது 4.22 இலட்சம் எக்டர் ஆகும். இது கடந்தாண்டு (2012-13ல்) பயிரிடும் பரப்பான 5.11 இலட்சம் டன்களைவிட குறைவாகும். கர்நாடகா, ஆந்திரா, மகாரஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் சூரியகாந்தி விதை உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது. சூரியகாந்தி எண்ணெய் அதிகளவில் மேற்கு இந்தியா மற்றும் தென்னிந்தியாவில் நுகரப்படுகிறது. மும்பை, சென்னை மற்றும் ஹைதராபாத் ஆகிய பகுதிகள் முக்கிய சூரியகாந்தி எண்ணெய் வர்த்தக தளங்களாகும்.

தமிழ்நாட்டில், 2013-14ல் சூரியகாந்தி விதை 7900 எக்டரில் பயிரிடப்பட்டது. இது கடந்தாண்டு (2012-13ல்) பயிரிடும் பரப்பான 10,782 எக்டரை விட குறைவாகும். மொத்த பயிரிடும் பரப்பானது கடந்தாண்டை விட (2012-13) 36 சதவீதம் குறைந்துள்ளது. கரூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், விருதுநகர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்கள் சூரியகாந்தி பயிரிடும் பரப்பில் 81 சதவீதமும் மற்றும் உற்பத்தியில் 79 சதவீதமும் பங்களிக்கின்றது. நடப்பாண்டில் (2014-15) ஜனவரி வரை மொத்த சூரியகாந்தி பயிரிடும் பரப்பானது 8400 எக்டர் ஆகும்.

விவசாயிகள் கார்த்திகைப்பட்டத்தில் பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்படும் சூரியகாந்தி விதை தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில் வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், வெள்ளக்கோயில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த 14 வருடங்களாக நிலவிய

சூரியகாந்தி விதைகள் விலையின் பொருளாதார மற்றும் வர்த்தக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வு முடிவுகளின்படி, சூரியகாந்தி விதையின் பண்ணை விலை ஏப்ரல் - மே, 2015ல் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 32-33 வரை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. மே மாதத்திற்கு பிறகு விலை கிலோவிற்கு ரூபாய் 2 முதல் 3 வரை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. மேலும், சூரியகாந்தி விதையை சேமிப்பதற்கு கிலோவிற்கு ஒரு ரூபாய் செலவாகும். எனவே, விவசாயிகள் அறுவடை செய்த சூரியகாந்தி விதையை சேமித்து மே மாதத்தில் விற்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி -0422-2431405.

<u>தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
எண்ணெய் வித்துக்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-2450812.

மக்கள் தொடர்பு அலுவலர்